தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஆனி௴ 28௳ (12-7-'22.) | ப. 12.

ஓர் விளம்பரம்.

இப்போது நமது பத்திரிகைப் பன்னிரண்டு பக்கங்களுடன் வெளியாய் வருகின்றது. இந்தியாவைப் பற்றிய சமாசாரங்களே இதில் பெரும்பாலும் அடங்கியுள்ளன. மேலும் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் பண்டிதர்கள் பலர் எழுதிவருவார்கள். இதுவரையில் எழுதப்பட்டதெல்லாம் முழுவதும் ஆரம்பமே. இனியும் நாம் பதினாறு பக்கமாகப் பெருக்குவது, நமது நாட்டினரின் ஆதரவையே பொருத்தது. கல்கத்தா யூனிவர்ஸிடியில், சமீபத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைவரையில் எல்லா விஷயங்களும் பையன்களுக்கு அவர்களின் தாய்பாஷையிலேயே கற்பிக்கப்பட வேண்டுமென்று சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. வங்காளத்தில் எப்படி பெங்காலி பாஷை யெங்கும் வியாபித்துக்கொண்டாடப்பட்டு வருவதென்பதை நம் நேயர்கள் அறிந்திருப்பார்கள். அப்படியே நமது நாட்டிலும் தமிழ் செழித்தோங்க வேண்டுமென்றால், நாம் எல்லோரும் தமிழை மிக்கப் பெருமையுடன் கொண்டாடுவது முற்றிலுமவசியம். இத்தமிழ் உலகையும் நம்மிடம் அன்பு பாராட்டித்தமிழர்கள் ஆதரித்து வந்தாலொழிய, நமக்கென்ன உத்சாக மிருக்கக்கூடும்? இப்பகுதியையே மாதிரிக்காகத் தங்களுக்கனுப்பி யிருக்கின்றோம். இத் தமிழ் உலகு பத்திரிகையைத் தாங்களபேக்ஷிக்காவிடில், தயவுசெய்து நமக்குடனே தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றோம். தாங்கள் ஒன்றையுமே எழுதாவிட்டால், அடுத்த பகுதியை வி. பி. மூலம் தங்களுக்கனுப்பத் துணிகின்றோம். மேலும் அதை தயவுசெய்து பெற்றுக்கொள்வீர்களென்றே நாம் நம்புகிறோம்.

௧௬, பசுபதி அக்கிரஹாரம், மைலாப்பூர், மதராஸ்.

மானேஜர், தமிழ் உலகு காரியாலயம்.

THE TAMIL WORLD

WE have received from the Publisher, 16, Pasupati Agraharam, Mylapore, the first number of the "Tamil Ulagu" (Tamil World) a new Tamil weekly devoted to politics, literature and the arts. In politics it is an independent nationalist organ and gives its full support to the Bardoli programme. It is written in easy, elegant and popular Tamil and the first number contains very interesting articles on "The position of India in the last (Tamil) year". "The geological formation of the earth" and "The Empire of the mind" and a sympathetic review of the first two volumes of the late Mr. C. Subramanya Bharati's works which have just been published. The editorial "Ourselves" declares that the object of the promoters of the journal is to give adequate and permanent expression to the surging new life in the Tamil land. If further issues maintain the level of the first number, the journal deserves to succeed; and we wish it a prosperous career. The annual subscription is Rs. 5 and the half-yearly subscription Rs. 3.

'The Daily Express'

A New Tamil Weekly

WE commend to the reading public the "Tamil World," a new Tamil weekly published at Mylapore. The promise of the first and the second issues which we have received will gladden those interested in the new vernacular movement. Mr. Pattabhiraman, M. A. assisted by a number of talented and enthusiastic young men, will be the Editor. With Congress politics and wide sympathies with Science and Literature, we hope that the weekly will receive good support. The annual subscription of Rs. 5 is fair, as the get-up is quite attractive.

'The Hindu'

TAMIL WORLD

WE welcome with pleasure the first issue of the "Tamil World," a new Tamil weekly, published at Mylapore, which we gather, is the fruit of the conjoint labours of a group of brilliant young men with Mr. S. Pattabhiraman, M. A, as the Editor. The first issue is quite promising and the contents are varied and interesting. If the future numbers realise the promise of the first, with more of variety and less of scholarly length, the "Tamil world" would prove an asset.

'The Swarajya'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப் பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ் பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெற வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

தபால் கூலியுள்பட சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

‘தமிழ் உலகு’ கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்
மைலாப்பூர் சென்னை

விஷய அடக்கம்.

வியாசங்கள். (பத்திராதிபர் எழுதியது)

லார்ட் இன்ச்கேப் கமிட்டி செலவைக்குறைத்தல் ... 95
மகாத்மாவின் நம்பிக்கை 96
நேடால் இந்தியர்கள் 96
கல்வியை சீராக்குதல் 97
மகாத்மாவின் ஆணை 99
இந்தியாவில் I. C. S. பரீக்ஷை 101
ஒரு பையனின் பெருமை 101

ஸாஹித்யம்

புயற் காற்று 102
ஸ்ரீமான் V. நாரயணய்யா, M.A.M.L, எழுதியது மகாகவி ரவீந்திரநாத் டாகூரின் “ரெக்” என்னும் கதையின் மொழிபெயர்ப்பு

தமிழ் உலகு

துந்துபிஸூ ஆனிமீ 28உ

லார்ட் இன்ச்கேப் கமிட்டி செலவைக் குறைத்தல்.

இந்தியா கவர்மெண்டில் இனியாவது செட்டாகச் செலவழிக்கும் உத்தேசம் இருப்பதாய்த் தெரிகின்றதா? கவர்மெண்டார் எவ்வழிகளில் செலவை ஒடுக்கக்கூடுமென்று விசாரிப்பதற்காக, லார்ட் இன்ச்கேப் என்பவரை நியமித்திருக்கிறார்கள். இங்கிலாண்டில் பிரிடிஷ் ராஜாங்கத்தில் பலமாதங்களுக்குமுன், ஸர். இரிக் கெட்டிஸ் என்பவருடன் இவரும் எவ்வாறு வரும்படியை பட்கலாமென்பதைப் பற்றித் தீர ஆலோசித்திருக்கிறார். வைஸ்ராயின் கௌன்சிலில் இப்போதிருக்கும் டாக்டர். ஸப்ரூ, தேக அசௌக்கியத்தால், தனது வேலையை சீக்கிரத்தில் விட்டுவிட நிச்சயத்திருப்பதாய் இந்தியா கவர்மெண்டாரால் அறிவிக்கப்பட்டது. இதன் சம்பந்தமாக வைஸ்ராயின் நிர்வாக சபையில் இரண்டு ஸ்தானங்களை எடுத்து விடலாமென்று, “காபிடல்” பத்திரிகையில் “டிச்சர்” எழுதுகின்றார். கல்விக்காகவும், ரெவின்யூவுக்காகவும், தனித்தனியே மெம்பர்கள் தேவையில்லையென இவர் எழுதுவது குறிப்பிடத்தகும். கல்வி இலாகா இந்தியர்களான மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருப்பதால், வைஸ்ராயின் கௌன்சிலில் இதற்காக ஓர்மெம்பர் ஸ்தானம அவசியமில்லை. “ரெவின்யூ” விஷயங்களையும வரவு செலவு மெம்பரே கவனித்து வரமுடியும்; ஆதலால், இவ்விரண்டு பதவிகளையும் நீக்கலாம்.

இக்காலத்திய ஸ்திதியையும், நாணயத்தையும், வருவாயையும் ஒட்டியே, எவ்வளவுதூரம் இந்தியா கவர்மெண்டார் சிக்கனமாகச் செலவிடுதல் கூடுமென்பதைக் கண்டுபிடித்து சொல்வதற்காக இக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்குமேல் யுக்தாயுக்தம் போல, இந்தியா அதிகாரிகள் யதேச்சையாய் நடக்கக்கூடும். தாங்கள் சொல்லும் ஆலோசனைகளை இந்தியா கவர்மெண்டார் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இக்கமிட்டியார் தங்கள் வேலைகளை முடித்துத், தங்கள் கடனைத் தீர்த்துக்கொள்ளுவார்கள். மற்றவர்களுடன் லண்டனில் இந்தியா கௌன்சிலிலிருக்கும் Mr. D. M. டலால் C. I. E. என்பவரும், Sir. R. N மூக்கர்ஜி, K. C. I. E. K. C. V. O., என்பவரும், Mr. புருஷோத்தம தாஸ்தாகர்லே C. I. E., என்பவரும், இக்கமிட்டியின் அக்ராஸனாதிபதியாகிய லார்ட் இன்ச்கேப்புடன் பரிசோதனை செய்ய நியமிக்கப் பட்டிருக்கின்றனர். கமிட்டி மெம்பர்களின் சம்பளத்திற்காகவும், மேலும அவர்களின் சௌக்கியத்திற்காகவும், நிரம்பவும் செலவழிக்கப்படும். நமமுடைய தேசத்தில், நம ராஜாங்கத்தில், நாம் எப்படி செட்டாகக் குடித்தனம் செய்யலாமெனக் காட்டுவதற்கு இங்கிலாண்டிருந்து பரம மேதாவிகள் இந்தியாவுக்கு வரவேண்டும்! இதுவும் ஓர் விநோதமல்லவா? இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் அஸெம்பளியில் எண்ணிறந்த சாமர்த்தியசாலிகள் இருக்கும்போது, இவர்களுக்குத் தெரியாத விஷயங்களை லார்ட் இன்ச்கேப் கமிட்டியார் நமக்கெடுத்து உபதேசிக்கப்போகிறார்கள்! ஸ்வராஜ்யம் என்னும் பொக்கிஷம் நமது கையில் இல்லாததுதான் இதறகுக்காரணம். இன்னும் கவனியுங்கள். லார்ட் இன்ச்கேப் கமிட்டியார் மிகவும் சிரமமெடுத்துக்கொண்டு யோசனை சொன்ன பிறகும், இந்தியா கவர்மெண்டார் அவர்களிஷ்டப்படியே நடக்கலாம்! இக்கமிட்டியின் ஆலோசனைகளை இந்திய ராஜாங்கத்தார் அங்கீகரித்துத் தங்கள் செலவை குறைப்பார்களேயாகில், அதுவும் நம்முடைய அதிருஷ்டத்தையே பொருத்ததாகும். இவ்வாறே இந்தியர்களுக்குக் கொஞ்சமும் நிச்சயமாய் லாபமில்லாத விஷயங்களில், பிரிடிஷாரின் பெருமையின் பொருட்டு, ஓர் இரக்கமற்ற கவர்மெண்டார் அளவுகடந்து செலவு செய்யக் காத்திருக்கின்றனர். எவ்விதத்திலும் செலவை ஒடுக்க, ஒரே பிடிவாதமாய், சம்மதிக்காத இவ்விந்தியா கவர்மெண்டார் லார்ட் இன்ச்கேப் கமிட்டியை யோசனை கேட்பது இக்கல்யாணகாலங்களில் சம்பந்தத்தை விரும்பாதவர்கள் சோதிடர்களைக்கேட்டுச் சொல்லுகின்றோம் என்பது போலவே நமக்குத் தோன்றுகிறது. இதுவரையில் இக்கமிட்டியைப்போல நூறு கமிட்டிகளையும் தாராளமாய் விழுங்கின இந்தியா கவர்மெண்டார் லார்ட் இன்ச்கேப்புக்காக பயந்து நமக்கு நன்மை செய்யப்போகிறார்களென நாம் ஸ்வபனத்திலும் நினைக்கவில்லை. ஏழ்மையால் வாடி மெலிந்து பரிதவிக்கும் நாம் சைன்யச்செலவென்ற இப்பெரிய பூதத்தைக் கட்டிக்கொண்டு வாழ்வது எப்படி? சைன்யத்திற்காகும் பணத்தைக் குறைக்க வேண்டுமென்று நாம் கதறியும், இந்தியா அதிகாரிகள் சிறிதேனும் லக்ஷியம செய்யவில்லை. நம்முடைய முதுகின்பீது ஏற்றப்பட்டிருக்கும் பளுவை கீழே இறக்கமனமில்லாதவர்கள், நமது தோள்களில் உட்காரவரும் கொசுவை ஓட்டுவதுபோல், இவ்விந்தியா கவர்மெண்டார் லார்ட் இன்ச்கேப்புடன் மிகவும் ரகசியமாய்க் கலந்து பேசிவிட்டு, பிறகே நமக்குப் பெரும் நன்மைகளை செய்ய எண்ணியிருக்கிறார்கள்.

மகாத்மாவின் நம்பிக்கை

Messrs. G. A. நடேசன் கம்பெனியாரால் சமீபத்தில் வெளியிடப்பட்ட "மகாத்மா காந்தியின் உபன்னியாசங்களும், அவர் எழுதியவைகளும்," என்றதோர் புஸ்தகத்திற்கு அவரது மகா பக்தராகிய C. F. ஆண்ட்ரூஸ் எழுதியுள்ள முகவுரையில் பின்வரும் விஷயமும் காணப்படுகின்றது.

"பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் ஜாதிபேதம் ஒழிந்தே போமென தான் மனப்பூர்வமாய் நம்பாது இருந்தால், பின்பு அதற்குத் தீவிரமான விரோதியாகவே இருந்திருக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி பன்முறைப் பெரிய அதிகாரிகளிடம் சொல்லக் கேட்டிருக்கிறேன். தென்னாபிரிகாவில் கவர்மெண்டாரைத் தளராமலே முழுவதும் பொறாண்மையுடன் எதிர்த்து நின்றபொழுது, ஜோஹான்ஸ்பர்கில் இவர் சொன்னதாவது: 'இங்கிலண்டிலுள்ள பிரிடிஷ் ராஜாங்கத்தைப் பற்றி,இஞ்ஞானம் எனக்கு இருந்ததால்தான், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தினிடம் என் மனது நாடிச் சென்று, அத்துடன் இவ்வாறு கட்டுண்டு கிடக்கின்றது. பிரிடிஷ் ராஜாங்கமுறையும் பிறர் காலின்கீழ் மிதியுண்டு, அவமதிக்கப்பட்டு எப்பொழுதாவது முற்றும் பிரயோஜனமற்றதாக விதிவசத்தால் மாறக்கூடுமேயாகில், அப்பொழுதே இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தினிடம் எனக்கிருக்கும் பக்தியும், விசுவாசமும் மறைந்து போய்விடும். என்னதான் இருந்தாலும், இவ்வுலகத்தின்கண், இப்பிரிடிஷ் ராஜாங்க முறைக்கு எங்கும் மரியாதையும், கௌரவமும், செல்வாக்கும், புகழும் உள்ளவரையில், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்கு நான் ஓரடிமைத்தொண்டனாகவே கிடப்பேன். இத்தென்னாபிரிகாவில், இந்தியர்களான எமக்கு ஓர் மகத்தான கஷ்டம் சம்பவித்திருக்கின்றது. இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இக்காலத்தில் இம்மாதிரியாகவே (நாங்கள் இங்கு) இருப்பது முழுமையும் மானக்கேடாகையால், அதைப் பற்றியே, எங்களுக்கும் அதற்கும் இதுகாறும் இருந்துவந்த சம்பந்தத்தை அடியுடன் கத்தரிக்கவாவது வேண்டும். இல்லாவிட்டால், (Passive Resistance) 'எதிர்க்காமல் எதிர்த்தல்' என்னும் திவ்விய பலத்தைக்கொண்டு, பிரிடிஷ் ராஜாங்க முறைகள், என்றைக்கும், எவ்விடத்திலும், எவர்களிடத்திலும், ஒரே மாதிரியாகவே, வித்தியாசமின்றி, நடத்தப்படும் வரையில், நாங்கள் போர்புரிந்தே தீருவோம். இங்கிலண்டில் மதிக்கப்பட்டுவரும், பிரிடிஷ் ராஜாங்க முறைகளாகியவைகளே நாங்கள் அபேக்ஷிப்பதாகும். ஜாதிபேதம் கூடவே கூடாதென ஒருமுறை ஒப்புக்கொள்ளப்பட்டு, மேலும் அது சட்டமும் ஆகிவிட்டால், பிறகு அது சட்டம்தான். பின்பு யார் அதை நிராகரிக்க முடியும்? ஜாதிபேதம் என்று ஒன்று பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் எங்கேயுமில்லையென்பது எத்தருணத்திலும் நிதரிசனமாகக் காட்டப்படவேண்டும்." இப்படியாக ஜோஹான்ஸ்பர்கில் மகாத்மா காந்தி பேசினார். இதைக் கேட்டவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களே. அன்றுமுதல் ஒருபோதும் மகாத்மா காந்தி இவ்வபிப்பிராயத்தை மாற்றவில்லை. எத்துன்பங்கள் நேரிட்டாலும், மிக்கப் பொறுமையுடன், இன்றைக்கும் இவர் இப்படியே எண்ணிவருவது எல்லையற்றதோர் வியப்பை எனக்கு உண்டாக்குகின்றது. இத்தருணத்தில், பிரிடிஷ் ராஜ்யத்தில் சக்தியும், சதுரையும் வாய்ந்தவர்களால் கைதியாக்கப்பட்டு, இவர் ஜெயிலில் கிடந்தாலும், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் தர்மங்கள் இன்னும் நிலைநிற்கின்றனவென்றே முழுமனதுடன் நம்புகின்றார். பிரிடிஷ் ராஜாங்கத்தில் அதர்மமென்னும் விருத்தை மேற்கொண்டவர்களே தற்காலத்தில் யஜமானர்களாக விளங்குவது ஒன்றுதான் பெருத்த துரதிருஷ்டமென்றும், மேலும் அவர்களே பிரிடிஷ் ராஜாங்க முறைகளை தற்சமயத்தில் திக்காரம் செய்து வருபவர்களென்றும் மகாத்மா காந்தி நினைத்துவருகிறாரென்பதில் சந்தேகமில்லை.

"இந்தியா கவர்மெண்டார் இவரைப்பிடித்த சில தினங்களுக்குமுன், ஆமதாபாதில் நான் இவருடன் இருக்கையில், இனிமேல் இங்கிலண்டின் பந்தத்தை இந்தியர்கள் முற்றிலும் அறுத்துவிடவேண்டுமென்று நான் எண்ணியும் மேலும் அப்படியே எழுதியும் வந்ததற்காக என்னை நிரம்பவும் தாக்ஷிண்யமின்றி கண்டித்தார். நான் அப்படி செய்துவந்ததால் பல தீங்குகள் நேரிட்டனவென்று என்னிடமே நேரில் இவர் சொன்னது ஞாபகமிருக்கின்றது. முன்பு நான் கூறியுள்ளபடி இத்துர்மதி பிடித்த இந்திய அதிகாரிகளிடமே இவருடைய நம்பிக்கையெல்லாம் அப்போது உடைந்து சிதறுண்டு கிடந்ததே ஒழிய, பிரிடிஷ் ராஜாங்கமுறைகளில் இவருக்கிருந்த விசுவாசம் சற்றும் வாடவில்லை. பிரிடிஷ் ஏகாதிபத்யத்தில் இந்தியாவும் ஓர் சிறந்த பதவியிலிருப்பது சாத்தியமே யென்றும், இந்தியர்கள் இக்காலத்தில் அனுபவித்துவரும் துன்பங்கள் நீங்குவதுடன், ஜாதிபேதம் என்பதும் மறையுமென்று மகாத்மாகாந்தி அன்றைக்கும் நினைத்தார்.

"இவ்வாறு பொறுமையுடனும்,நம்புதலுடனும் இவ்வளவு வருஷகாலமாய் இவர் எதிர்பார்த்து வந்தது கடைசியில் கைகூடுமென்றே யார்தான் உறுதியாகச் சொல்லமுடியும்? அது காலத்தின் வசத்திலேயே இருக்கின்றதாகும். ஆகிலும் ஆமதாபாதில் மகாத்மா காந்தியுடன் இருக்குங்கால், தென்னாபிரிகாவில் இவர் அக்கொடுங்கோன்மைக்கு உட்பட்டிருந்தும், பிரிடிஷ் ராஜாங்கமுறையிடத்திலும், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தினிடமும், இப்படிப்பட்டதோர் நம்பிக்கை வைத்திருப்பதைப்பார்த்து நான் திகைத்ததுண்டு. . . . .

மேலும் ஆமதாபாதில் இவரது குற்றத்திற்காக விசாரணை நடந்தபோது, இவர்கொடுத்தவாக்கு மூலத்தையும்நன்றாய்ப்படித்திருக்கிறேன். இந்தியாவை இக்கிலீஷார் ஆண்டுவந்தவிதத்தைப்பற்றி இவர் என்னதான் கூசாமலும், மிக்கக்கடுமையுடனும் கண்டித்திருக்கிறாராகிலும்,இவர் இவ்வபிப்பிராயத்தைச்சிறிதேனும் மாற்றியதாகத் தெரியவில்லை. பிரிடிஷ் ஜனங்கள் ஒருகாலத்தில் நமக்கு அனுகூலமாகவே இருப்பார்களென இன்னமும் நம்பி வருகின்றார். மேலும் நிஜமாகவே ஜாதி பேதமென்னும் அநியாயமும் தொலைந்து இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமுள்ள மனஸ்தாபங்களெல்லாம் பறந்து போமென்றும் எண்ணுவது இவருடையமேலான குணத்தைக் காட்டுகிறதல்லவா! இவ்விரண்டு காரியங்களும் உண்மையாகவே ஒருநாள் இந்தியர்களுக்கு விதியாகுமென்ற நம்பிக்கைதான், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள இவரது பக்தியை வளர்க்கின்றது. இதுவும் ஓர் மாயைதான் என இவருக்குத் தெளிவாய் பட்டுவிட்டால் இந்தியாவுக்கும் இங்கிலண்டுக்குமுள்ள பந்தத்தை அறுத்துத்தள்ளுவதே முக்கியமென இவர் கருதுவாரென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை

நேடால் இந்தியர்களின் கதி

சென்றவாரம் 'தமிழ் உலகில்,' நேடாலில் உள்ள இந்தியர்களின் ஸ்திதியைப்பற்றி எழுதியிருந்தோம். நாம் எதிர்பார்த்தபடியே மேன்மேலும் சம்பவங்களு மிருக்கின்றன. இம்மாதம் 6-ந்தேதியன்று காமன்ஸ் சபையில், நேடா

வில் இந்தியர்களுக்கு முற்றும் விரோதமான மூன்று சட்டங்கள் "பாஸா" காமல் தடுக்கப்படுமா என்று Mr. சர்ச்சில் என்பவரைக் கர்னல் வெட்ஜ்வுட் கேட்டார். Mr. சர்ச்சில் குடியேற்றநாடுகளின் மந்திரியென நாம் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். இந்தியாவில், இந்தியர்களும் ஆங்கிலேயர்களும், ஒரேமனதுடன், நேடால் கவர்மெண்டார் அந்நாட்டில் இந்தியர்களை நடத்திவருவது மிகவும் அக்கிரமமேயென்று சொல்வதால், Mr. சர்ச்சில் இதில் தலையிடுவது தகுமென்று கர்னல் வெட்ஜ்வுட் வற்புறுத்தியும் பிரயோஜனமில்லாமற் போயிற்று. மேலும் Mr. சர்ச்சில் இந்தியர்களின் நிமித்தம் தென்னாபிரிகாவில் யூனியன் கவர்மெண்டாருடைய மனஸ்தாபத்தைத் தேடிக்கொள்வதில் தனக்கு இஷ்டமில்லையென்றும் உதாஸீனமாகப் பேசியிருப்பதை நாம் மறக்க முடியவில்லை. இந்தியர்களென்றால், ஏன் இவர் மட்டமாக நினைக்க வேண்டும்? பிரிடிஷ் ஜனங்களை வேறு ஒரு தேசத்தில் இம்மாதிரியாய் நடத்துவார்களேயாகில் இவர் இப்பொழுது போலவே சும்மாயிருந்துவிடுவாரா? அல்லது இந்தியாவிலும் நாம் தென்னாபிரிகாவிலிருந்து இங்குவரும் ஐரோப்பியர்களை இப்படியே ஹிம்ஸித்தால், அப்பொழுது Mr. சர்ச்சில் இந்தியாகவர்மெண்டாரின் மனஸ்தாபமுண்டாகுமேயென பயந்து, தூரத்தில் மரியாதையுடன் ஒதுங்கியே நிற்பார் போலும்! இவ்விஷயத்தில் இந்தியாகவர்மெண்டார் தங்கள் பிரஜைகளுக்காக என்ன செய்திருக்கிறார்கள்? நேடால் நாட்டில் இந்தியர்கள் எக்கேடு கெட்டால் இவர்களுக்கென்ன? மேலும், இவர்களை சிறிதும் லக்ஷியம் செய்து பிரிடிஷ்கவர்மெண்டார் நேடால் இந்தியர்களுக்காக வாதிப்பார்களென்று நாம் எண்ணுவது மதியீனமாகும். இந்தியா கவர்மெண்டாருக்கு உண்மையாகவே இந்தியர்களின்மீது பற்றுதலிருந்தால், Mr. சர்ச்சில் இத்துவனியில் இவர்களை அவமதித்தே பேசியதற்கு என்ன பதிலை நாம் காணப்போகிறோம்? இந்தியா அதிகாரிகளை, Mr. சர்ச்சில் திருணமாக நினைத்தது நமக்கெவ்வித ஆச்சரியத்தையும் உண்டாக்கவில்லை. பல அம்சங்களில் லார்ட் கர்ஸனைப்போலவே இவரும் இருப்பவராதலால், இவர் இப்படிப் பேசுவாரென நாம் எதிர்பார்த்திருந்தோம. இந்தியர்களும், இந்தியா கவர்மெண்டாரும், தங்கள் அதிருப்தியைக்காட்டுவதால் என்ன செய்யக்கூடும்? தென்னாபிரிகா யூனியன் கவர்மெண்டாருக்கு முன் நாம் எம்மாத்திரம்?

கல்வியை சீராக்குதல்

மீனாக்ஷிகாலேஜ் சிதம்பரம்.

Hon. Mr. S. R. M. அண்ணாமலை செட்டியார் அவர்கள் சிதம்பரத்தில் "மீனாக்ஷிகாலேஜ்" என்றதோர் வித்தியாசாலையை ஸ்தாபித்து நடத்திவருவதை நமது நேயர்கள் நன்கறிந்திருப்பார்கள். அதில் சென்ற ஜூன் மாதம் 29ம் தேதி வியாழனன்றயதினம், பி. எ. வகுப்புகள் Mr. C. ராமலிங்க செட்டியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. அப்பொழுது இந்த ராஜதானியில் நம் படிப்பின் சம்பந்தமாக Mr. C. R. செட்டியார் பேசியது கவனிக்கத்தக்கது. H. E. கவர்னரிடமிருந்தும், ஸர். டாடண்டர், ஸர். ஹாபீபுல்லா, Hon. விட்லேலஸ், Hon. K. V. ரெட்டி நாயுடு, ஸர், R. N. முக்கர்ஜி, இவர்களிடமிருந்தும், இன்னும் மற்றப் பிரபுக்களிடமிருந்தும் ஆசி கூறும் கடிதங்களும், தந்திகளும் வந்து குவிந்தன. Mr. ராமலிங்க செட்டியார் இங்கிலண்டிலுள்ள சர்வகலாசாலையில் படித்து, பிறகு பங்களூரில் ப்ரொபஸர் உத்தியோகத்தில் அமர்ந்தார். சொல்பகாலத்திற்குள் மைசூர் சமஸ்தானத்தில் கல்வி இலாகா தலைமையதிகாரம் பெற்று, அங்கே நல்ல வேலை செய்து புகழடைந்திருக்கின்றார். சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த "ஸெனெட்டிலும்," "ஸிண்டிகெட்டிலும்," இவர் ஓர் பிரபலமான மெம்பர். மேலும் தற்காலத்தில் சென்னை கவர்மெண்டார் இவருக்கு மிகுந்த மரியாதை செய்து, கல்வி விஷயங்களில் இவரது ஆலோசனைகளைக் கேட்கக்கூடியவர்களாகவும் நடந்து வருகின்றார்கள்.

"மீனாக்ஷி காலேஜ்" 1920 வருஷத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. காலஞ்சென்ற தனதருமை சகோதரராகிய திவான் பகதூர் ராமஸ்வாமி செட்டியாரின் ஞாபகார்த்தமாகவே இவ்வித்தியாசாலையை Hon. Mr. S. R. M. அண்ணாமலை செட்டியார் ஏற்படுத்தினார். தற்சமயத்தில் இதற்கு 350000 ரூபாய் மூலதனமிருக்கின்றது. "காலேஜ்" என்றால், நம் தேசத்தில் படிக்கும் சிறுவர்களுக்கெல்லாம் கலாசாலையின் சமீபத்திலேயே தங்குவதற்கு வேண்டிய சௌகரியங்கள், என்றைக்குமில்லை. இஃதோர் பெரியதவறு. ஓர் பட்டணத்தில் படிப்பவர்கள் எல்லோருக்கும் நெருங்கிய பந்துக்களிருக்கமாட்டார்கள். மேலும் கல்விற்கென்று பையன்கள் இளமையிலேயே பெற்றோரை விட்டு வேறு ஊர்களுக்குச் செல்வதால், அங்கே அவர்களை சரியாக கவனித்துக்கொள்வது கலாசாலை அதிகாரிகளின் பொறுப்பாகின்றது. இது முற்றிலும் யுக்தம்தான் என இது காறும் அங்கீகரிக்கப்பட்டும், காரியத்தில் இதைச் செய்து காட்டுவதைப் பலகாரணங்களால் துர்லபமாக எண்ணுகிறார்கள். ஆகவே Hon. S. R M. அண்ணாமலை செட்டியார் இக்காலேஜிலிருக்கும் மாணாக்கர்களுக்கெல்லாம் ஹாஸ்டல் வசதி செய்து தருவதற்காக இப்போது சிரமத்தைப் பாராமல் உழைப்பது நிரம்பவும் சிலாகிக்கத்தக்கது. இதற்கென்று இவர், கவர்மெண்டாரின் உதவியால், விஸ்தாரமான நிலம் சேர்த்திருக்கிறார். இதில் மீனாக்ஷி காலேஜையும், ஹாஸ்டல்களையும் கட்டி முடிப்பதற்குப் பததுலக்ஷ ரூபாய் ஆகுமென்று சொன்னார்.

Mr. C. ராமலிங்க செட்டியார் பேசியதில் பல விஷயங்களிருப்பதால், நாம் அதிலிருந்து சில பாகங்களை எடுத்தெழுதுகின்றோம்.

"இம்மீனாக்ஷி காலேஜின் சம்பந்தமாய் என்னை இவ்விடம் அழைத்ததற்காக, Hon. Mr. அண்ணாமலை செட்டியாரவர்களுக்கு மனப்பூர்வமாய் எனது வந்தனத்தைக் செலுத்துகிறேன். ஏன் என்னை இவர் தேர்ந்தெடுத்தாரோ, அது எனக்குப் புரியவில்லை. கேவலம் நான் வக்கணையில் தேர்ந்தவன். ஆனால் செட்டியாரவர்களோ எப்பொழுதும் காரியத்திலேயே கண்ணாயிருப்பவர். (சபையில் கரகோஷம்). பேச்சுவாயர்களிடம் என்றைக்கும் கொஞ்சம் பக்ஷபாதம் காரியவாதிகளுக்குண்டென்று எண்ணுகிறேன். (சிரித்தல்) இதைத்தவிர வேறு என்ன காரணமெனப் புலப்படவில்லை. நமது தேசத்திற்காக, நான் இன்றைக்கெல்லாம் செய்யமுடிந்தது கவர்மெண்டாருடையவும், ஜனங்களுடையவும் ஆதரவால்தான். ஆனால் Hon. செட்டியாரவர்கள் தான் நினைத்ததெல்லாவற்றையும், பிறருதவியன்றியில் சாதித்திருக்கிறார். (கரகோஷம்.) இவரது சாமர்த்தியத்தை நான் மெச்சுவதுடன், இச்சிதம்பரமும் இவரை யடைந்திருப்பதில் மிக்கப்பெருமையுள்ளதாகவே தோன்றுகின்றது. ஆதியில் இவர் என்னை அழைத்தபோது, சரீர அசௌக்யத்தால் நான் வரக்கூடவில்லையென்று வாதித்தும் அது பயனில்லாமற் போயிற்று. காரியவாதிகள் எப்பொழு

தும் காரணகாரணங்களை யோசிப்பதில்லை. (சிரித்தல்). மேலும் கண்டிப்பாகவே நடப்பார்கள். கடைசியில் நான் எவ்வளவு உண்மையாக Hon. அண்ணாமலை செட்டியாரவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்திருக்கிறேனென்பதை நீங்களே ஒப்புக்கொள்ளுவீர்கள்."

"முதலில் நான் என் பிரசங்கத்தை எழுதியே வாசிக்க எண்ணியிருந்தும், பின்பு அது ருசியுள்ளதாய் ஆகமாட்டாதெனக் கண்டுகொண்டேன். ஒன்றையுமே எழுதாமல் நான் இம்மாதிரியாகப் பேசுவதை நீங்கள் க்ஷமிக்க வேண்டும். இதுவும் ஒரு தாராளமான சம்பாஷணையே ஒழிய, பணிக்கையுள்ளதோர் உபந்நியாசமல்ல. மேலும் இக்காலையில் எனக்களித்த விருந்தால் உண்டானமயக்கம் இன்னும் தீரவில்லை."

ஒரு காலேஜ் வைப்பதென்றால், சிதம்பரத்தைபோலொத்த இடமல்லவா கிடைக்கவேண்டும்! மாணிக்கவாசகரும், நந்தனும் இருந்த இக்ஷேத்திரத்தில், இம்மீனாக்ஷி காலேஜ் ஓர்யூனிவர்ஸிடியாகவே கூடியசீக்கிரத்தில், வளரும்.

சென்னை கவர்மெண்டார் தாங்கள் கொடுப்பதாய்வாக்களித்தபடி, இக்காலேஜ் செலவுக்காக இன்னமும் பணம் தராதிருக்கும்போது, Hon. அண்ணாமலை செட்டியார் துணிச்சலுடன் இவ்வித்தியாசாலையைத்தாங்கிவருவதே வியப்பை உண்டாக்குகின்றது. சென்னை கவர்மெண்டார் "காலேஜகளுக்களிக்கவேண்டிய திரவியத்தை இதுவரையில் கொடுக்காதது அக் கவர்மெண்டாரின் மானத்தைக்காப்பாற்றக் கூடியதாயில்லை. செட்டைபற்றி அவர்கள் ஓயாமல் பேசிவந்தாலும், படிப்பு விஷயமாய் ராஜாங்கத்தார் சிக்கனம் செய்துவருவதாகச் சொல்வது பரிகாசத்திற்குத்தான் இடமாயிருக்கும். சென்னை சட்டசபையில் ஜனங்களின் கல்விக்காக, செலவாகி விட்டதேயென்று நாங்கள் ஒருபோதும் கூக்குரலிட்டதில்லை. படிப்பின் நிமித்தம் செலவிடப் போதுமான அளவு பணம் இல்லாதது பற்றியே மிகவும் வருத்தமடைகிறோம். செலவைக்குறைப்பதற்காகக் காமன்ஸ் சபையில் பெரியவாக்குவாதம் நடந்தபோது, கல்விசம்பந்தமாய் ஒரு காசுகூடக்குறைக்கப்பட வில்லை. மேலும் இம் மகாணத்தில் படிப்புக்காகத்திரண்டு வரும் சிறுவர்கள் ஒவ்வொருவருஷமும் அதிகமாகவே காணப்படுகிறார்கள். இந்தியர்களுக்கு அவர்களின் சுதந்திரங்களைக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் Rt. Hon. மாண்டேகூவின் சீர்திருத்தசட்டம் ஜனங்களின் முன்னேற்றத்தையே நாடிவதாய் எங்கும் பறைபறைந்து விட்டு, பிறகு படிப்பை ஒடுக்கயத்தனிப்பது அச்சீர்திருத்தசட்டத்திற்கு விரோதமாகவே முடியும். (கேளுங்கள், கேளுங்கள்). ஆகையால், கடன்வாங்கியேயாகிலும், கவர்மெண்டார் காலேஜுகளுக்கு உதவிபுரிவதில் சற்றும் தயங்காமலே தங்கள்கடமையைச் செலுத்துதல் அவசியம்.

கல்வி இலாகாவிஷயமாய் கவர்மெண்டார் நேராகவே நடக்கவில்லை. "தற்காலத்திலுள்ள வித்தியாசாலைகளை ஒழுங்காக சம்ரக்ஷிப்பதுடன் மற்றும் பல இடங்களில் புதிதாய் அநேகம் ஏற்படுத்தவும் வேண்டும்.

Hon Mr. அண்ணாமலை செட்டியாரைப்போன்ற பரோபகாரிகள், கவர்மெண்டாரின் ஸ்திதியையறிந்து, அவர்கள் தேறினபிறகே பணத்தைவாங்கிக் கொள்ளத்தயாராயிருக்கின்றார்கள். கவர்மெண்டாரின் நாணயம் சப்பகாலத்திற்குள் தேறலாம். இல்லாவிடில், "இன்லால் வென்ஸி" கோர்ட்டில் உடனே இவர்கள் மனுசெய்து கொள்ளட்டும். (கரகோஷம்).

கவர்மெண்டார் பின்வாங்குவதால், ஜனங்களே முன்வந்து நாடுமுழுவதும் படிப்பைப்பரவச்செய்வது முக்கியமல்லவா? இந்த ஜில்லா முனிசிபாலிடிகளிலும், லோகல்போர்டுகளிலுமிருப்பவர்கள் இக்காலா சாலையின் நிமித்தம் உழைத்தல் தகும்.

வித்யா இலாகாவில் பலதிருத்தங்கள் அவசியமென்பதை. ராஜாங்கத்தார் உணர்ந்து, மதராஸ் யூனிவர்ஸிடியை சீராக்க நிச்சயித்திருக்கிறார்கள். இந்தசந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் தங்களபிப்பிராயங்களை வெளியிடுவது கடமையாகும். காங்கிரஸ் கக்ஷியார் செய்த பெரும் நன்மைகளுக்குள் இக்காலத்திய படிப்பிலும் ஊழல்கள் இருக்கின்றனவென்றும் அவைகளைமாற்றுவதே முறைமையென்றும் உலகத்தினருக்குக் காட்டியிருப்பதே மிக்கப்பெரியது. இத்தருணத்தில் நான் எண்ணுவதையும் சொல்லுகின்றேன். பின்பு அனுபவத்தால் எனது எண்ணங்கள் மாறுபடவும் கூடும் (சிரித்தல்). (Primary Education) முற்றும் ஆரம்பக்கல்விக்கும், (Elementary Education) இன்னும் இதற்குயர்ந்த கல்விக்கும் உள்ள வித்தியாசங்களை அடியுடன் ஒழிக்கவேண்டும். பட்டணங்களில்கற்கும் சிறுவர்களுக்கு ஆங்கிலத்தின் பரிசயம் எதற்காக? மேலும் கிராமங்களில் படிப்பவர்களுக்கு ஆங்கில பாஷையையும் கற்பித்தல் ஏன்தகாதது? இவ்விதம் தாரதம்மியம் இருப்பது கெடுதல்களையே விளைவிக்கும். தங்கள் குழந்தைகளைப்படிக்கவைக்கும் பெற்றோர்களுக்கு இதனால் உத்ஸாகமும், அக்கரையும் குறைவதால்; தேசத்தின் முன்னேற்றம் தடுக்கப்படுகின்றது. கிராமப் படிப்புக்கும், பட்டிணப் படிப்புக்கும் இருந்துவரும் ஏற்றத்தாழ்வு நீங்கியே, எங்கும் கல்விவிஷயத்தில் "அத்வைதமே" கொண்டாடப்பட்டு வருவதுதான் அழகாகும். (கேளுங்கள் கரகோஷம்). இவ்வபிப்பிராயம் புதிதல்ல. சில வருஷங்களுக்கு முன் வைஸ்ராயின் கௌன்சிலில் மெம்பராயிருந்த, ஸர். சங்கரன் நாயரும், ஸர் மைகல் ஸாட்லருடன் இந்நாட்டில் கல்வி சம்பந்தமாய் விசாரணை செய்த கமிஷனர்களும், இதையே தெரிவித்திருக்கிறார்கள்."

"மற்றொரு முக்கியமான விஷயமுண்டு. அதாவது, ஒவ்வொரு வித்தியாசாலையுடன் ஹாஸ்டல்களும் முன்னிலும் நூறு மடங்கதிகமாய் ஏற்படுவதால்தான் படிக்கும் பையன்களுக்கு சௌக்கியமுண்டாகும். வேறு ஊர்களில் படிப்பதற்கு வேண்டிய சாதனங்களில்லாவிடில், சிறுவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உத்ஸாகமும், அமைதியும் மிகுதியாக இருக்கமாட்டா. தக்ஷணத்தில் வழக்கப்படி ஹாஸ்டல்கள் கட்டுவதற்கே கவர்ன்மெண்டார் திரவியசகாயம் செய்துவருகிறார்களே ஒழிய, பிரதிவருஷமும் ஐரோப்பிய வாலிபர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஹாஸ்டல்களில் செலவை ஒருபாகம் வகித்துவருவதுபோல், இந்தியர்களின் விஷயத்திலும் கவர்மெண்டார் வகித்துவருவதில்லை. இதனால் ஐரோப்பியர்களுக்கென்று ராஜாங்கத்தார் பக்ஷபாதம் செய்யக்கூடாதென நான் கூறவில்லை. ஆகிலும் நம்முடைய குழந்தைகளுக்கும் பசியென்பது ஒன்று உண்டல்லவா? (சிரித்தல்). ஆகையால் அவர்களிடத்திலும் கவர்மெண்டார் அக்கரை பாராட்டத்தான் வேண்டும். (கரகோஷம்). படிப்புக்காகத் தாம் சென்றவிடத்தில் உறவினர்களும், ஹாஸ்டல்களில் வசதியும், இல்லாதவர்கள் இருசமையற்காரர்களுடன் மன்றுடுவார்களையாகில், அவர்கள் சாப்பாட்டு ராமர்களாகவே ஆவது திண்ணம். (சிரித்தல்). நமது ஹாஸ்டல்களுக்கும் ஒவ்வொரு வருஷமும் ராஜாங்கத்தார் பணவுதவி செய்யவேண்டும். நம் நாட்டிலுள்ள பிரபுக்களும் ஜமீன்தார்களும் படிப்பவர்களுக்கென்று ஒவ்வோர் கலாசாலையையும் சேர்ந்

தாற்போல் ஹாஸ்டல்கள் வைப்பார்கள்.

. . . மகா பக்தனுகிய நந்தனுக்கு தரிசனம் கிடைக்காதவாறு அங்கிருந்தவர்கள் தடுத்த போது, வெறும் கல்லால் செய்யப்பட்டதேயாயினும், அந்நந்தியும் மனமுருகித் தவித்ததல்லவா! அப்படிப்பட்ட இச்சிதம்பரத்தில் ஒருவருக்கொருவர் அன்புடனுமில்லாமலா போகக்கூடும்? "நாமே முன்வந்து நமது தேசத்தை ஆள வேண்டுமென்றால், நமக்குள் படிப்பும் எல்லையற்றதாய் விருத்தியாகவும் வேண்டும்."

"பட்டிக்காடுகளிலும், பட்டணங்களிலும், ஒரே விதமான கல்வி கற்கப்பட்டுவந்தால், பிறகு எல்லா ஹைஸ்கூல்களிலும் பையன்கள் கிராமங்களிலிருந்து குவிந்து விடமாட்டார்களா, எனக் கேட்கலாம். கல்விக்கு ஓர் அளவில்லையாகையால், அவ்விதமாக நான் எப்பொழுதும் பயப்படவில்லை. படிப்பும், ஞானமும், பரவுதலால், இவ்வுலகத்தில் பிரளயமும் உடனே வந்துவிடமாட்டாது. (கேளுங்கள்). கிராமத்திலிருப்பவர்கள் இம்மாதிரியாகத்தான் படிக்கவேண்டுமென்று நிருணயிப்பதற்கு நமக்கென்ன அதிகாரமுள்ளது? அவரவர்கள் இஷ்டப்படியென இக்காலத்தில் நாள்தோறும், தேசந்தோறும் நாம் வக்கணை பேசிக்கொண்டே, கிராமங்களில் வசிப்பவர்களுக்குத் தனியாய் ஓர் விதி செய்வது என்ன நியாயம்? அஞ்ஞானமாகிய இருட்டில் ஜனங்களை இறுத்தி, அதனுல் நாடெங்கும் சந்தோஷமும் சுகமும் வளர்ந்து வருகின்றனவென்று நாம் சொல்லிக்கொள்ளுவது மகாபாதகமாகும். ஓர் தேசத்தில் எவனுக்கும் படிப்பு எளிதில் கிடைக்கக்கூடியதாகவே இருக்கவேண்டும். மேலும் தற்சமயத்தில் போலல்லாது, ஒவ்வொருவருக்கும், ஓர் வயதிற்கு மேல், ஒரு தொழிலில் பயிற்சி உண்டாக்குவது முற்றிலும் இன்றியமையாதது. ஜனங்கள் எல்லோரும் படிப்பால் நன்மையடைய வேண்டுமாகின், தொழில்களைப்பற்றியும் ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் நமது சிறுவர்களுக்கு நாம் கற்பித்தல் மிகவும் அவசியம்." . . . . .

"மேலும் நமது தாய்பாஷையில்தான் எவ்விஷயத்தைப் பற்றியும் நாம் பையன்களுக்கு உபதேசிப்பது தர்மமாகும். ஆங்கில பாஷையைவிட்டுவிட்டால், நமக்கு வேறு ஒன்றுமில்லையென எண்ணுவது முழு மௌட்டியத்தையே காட்டுகின்றது. இங்கிலீஷார் எப்பொழுதாவது ப்ரெஞ்சு பாஷையை உபயோகித்து வருவார்களா? அல்லது ப்ரெஞ்சுக்காரர்கள்தான் ஸம்ஸ்கிருதத்திலேயே சகல காரியங்களையும் நடத்துவார்களா?" . . .

. . . .

"மதராஸ் யூனிவர்ஸிடி சீர்திருத்தங்கள் எவ்வாறு இருக்கவேண்டும்? தற்காலத்தில், சென்னை ஸர்வகலாசாலையில் பையன்களை பரீக்ஷைமாத்திரம் செய்து வருகிறார்களே தவிர, அவர்களைப் படிப்பிப்பதில்லை. இம்மாகாணத்தில் இக்கலாசாலையைச் சேர்ந்த பலகாலேஜ்கள் இருக்கின்றன. ஆயினும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. மாணக்கர்களை பரீக்ஷை பண்ணுவதுடன், அவர்களுக்கு யூனிவர்ஸிடியிலேயே படிப்பிற்கும் எல்லா சௌகரியங்களை செய்து வைக்கவும் வேண்டும். ஆகவே இதை நாம் ஓர் "கற்பிக்கும் ஸர்வ கலாசாலையாக" மாற்ற விரும்புகிறோம். "கற்பிக்கும் ஸர்வகலாசாலை"யெனில், அதற்கொரு எல்லையுமுண்டு. ஏனென்றால் சென்னைப்பட்டணத்தில் உபதேசிக்கப்படுவது சிதம்பரத்திலிருப்பவர்களின் காதுக்கு எட்டாது. ஆகையால் சென்னையிலுள்ள காலேஜ்கள் மாத்திரமே ஒன்றுசேர்ந்து, ஓர் "கற்பிக்கும் ஸர்வகலாசாலை" யாய் ஆகக்கூடும். மேலும், இந்த ராஜதானியில் மற்றவிடங்களிலிருக்கும் கலாசாலைகளில் படிப்பவர்கள் இம்மதராஸ் யூனிவர்ஸிடியால் பரீக்ஷிக்கப்படுவார்கள். இருந்தாலும் ஆராய்ச்சி செய்பவர்களும், சென்னையிலேயே தங்கி, இப்புதிய ஸர்வ கலாசாலையின் கீர்த்தி வாய்ந்த போதகர்களாக உழைத்து வருவார்கள். இப்படித்தான் அலகாபாதிலும் அங்கிருக்கும் யூனிவர்ஸிடி சீராக்கப்பட்டது. இம்மாகாணத்தில், ஒவ்வோர் ஊரிலும் உள்ள வித்தியாசாலைகள், இம்மாதிரியாகவே "கற்பிக்கும் ஸர்வகலாசாலைகளாக" வளரும் வரையில் இச் சென்னை யூனிவர்ஸிடியின், அங்கங்களாய் இருக்கும். ஒரு காலத்தில், திருச்சியில் இப்படிப்பட்டதோர் ஸர்வகலாசாலை ஸ்தாபிக்கப்படுவதும் நிரம்பவும் யுக்தமே. . . .

. . . . ஸர்வ கலாசாலை யென்றால் அங்கே சகல சாஸ்திரங்களும் உபதேசிக்கப்படுவது அவசியமில்லை. . . . . ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு விஷயத்தில் பாண்டித்தியத்திற்காகக் கியாதி அடைந்திருக்கலாம். . . . . இம்மீனாக்ஷி வித்தியாசாலையும் ஸமஸ்கிருதம், தேசசரித்திரம் இவைகளில் மிக்கப் புகழ்பெற்றால், வெகு அழகாக இருக்கும். (பிரஜைகளுக்குப்) படிப்பையளிப்பதே (கவர்மெண்டாரின்) பிரதானமான தர்மம். இக்காலத்தில் நமது தேசத்திற்கு இன்னும் அநேக ஸர்வகலாசாலைகள் வேண்டும். "ஜமீன்தார்களும், தனவந்தர்களும் ஏராளமாய் இந்தியாவின் நிமித்தம் வித்தியாதானம் செய்ய முன்வரட்டும். இவர்கள் கல்யாணங்களில் செலவழிப்பது போலவே, இவ்விஷயத்திலும் தாராள மனதுடன் பணவுதவிசெய்வார்கள். . . . . "

மகாத்மாவின் ஆணை

Mrs. கஸ்தூரிபாய் காந்தி, Mrs. மகமத் அலி இவர்கள் பேசியது.

தமது புருஷர்களும், புத்திரர்களும் ஜயிலிலடைப்பட்டிருக்கும் பொழுதும், இவ்விரு மாது சிரோமணிகளுடைய குன்றாத தேசபக்தியும், மன உறுதியும் எவ்வளவு வியக்கத்தக்கதாயிருக்கின்றன! ஆறு வருஷ காலம் சிறைவாசம் விதிக்கப்பட்ட அன்றையதினம், "கதரை" யே கட்டிக் கொள்ளுங்கள்" என்று மகாத்மாகாந்தி தன்னைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்களுக்கு உபதேசித்த மொழியையே இவர்கள் விடாது மேற்கொண்டு மற்றவர்களையும் அவ்விதமே செய்யும்படி தங்களாலியன்றவரையும் தூண்டி வருகிறார்கள். ஹிந்துக்களும், மகமதியர்களும் ஒன்று சேரவேண்டுமெனவும், அவ்வித ஐக்கியம் ஏற்பட்டாலன்றி தேசத்திற்கு ஸ்வராஜ்யம் கிட்டுவது அருமையெனவும் தங்கள் கணவர்கள் கொண்டிருந்த கொள்கையை இவ்விருவரும் அநுபவத்தில் நடத்திக் காண்பிப்பது பதி சொற்தவறாத உத்தமஸ்திரீ தர்மத்தை வெகு நன்றாய் விளக்கிக் காட்டுகிற தென்பதை நாம் விவரித்துக் கூறவேண்டியதில்லை. இந்த உத்தமிகளைப்போல் நமது இந்தியாவில் ஒவ்வொருஸ்திரீயும், தேசபக்தி பூண்டு ஒழுகும் தன் கணவனுடன் சேர்ந்து உழைக்க முன்வருவாளாயின், மகாத்மா காந்தியின் மனோராஜ்யங்கள் வெகு சீக்கிரமே உண்மை நிலையடையுமென்பதில் தடை யேதேனும் உண்டோ? சென்ற ஜூலை மாதம் 5ம் தேதியன்று பம்பாயில், ஸ்திரீ சங்கமொன்று கூடிய பொழுது இவ்விருவரும் என்ன பேசினார்களென்பதைச் சற்று கவனிப்போம்.

Mrs. கஸ்தூரிபாய் காந்தி கூறியதாவது: "மகாத்மாவும், மற்றவர்களும் கூறியதைவிட நான் என்ன அதிகம் சொல்லப்போகின்றேன்? வெளி

நாட்டிலிருந்து வரும் துணிகளை விலக்கி நம்மிந்தியாவில் நூற்று நெய்யப்படும் வஸ்திரங்களையே உடுக்கவேண்டுமென்று மகம்மது அலி முதலியவர்கள் உபதேசித்ததே நான் மீளவும் இங்கு கூறப்போகும் விஷயமாகும். நாம் மேன் மேலும் "கதரை" விருத்தியாக்குவதுடன், நம் புருஷர்களையும் அதைத்தவிர வேறொன்றும் அணியாமற் செய்யவேண்டும். இதனாலேயே நாம் ஆயிரக் கணக்காக ஜயிலிலடைபட்டிருக்கும் ஒரு குற்றமுமற்ற அவ்வாலிபர்களை விடுவித்து விடுவோமென்பதில் ஐயமில்லை. நாம் இப்பொழுது செய்யவேண்டிய யுத்தம் கேவலம் இரும்பாயுதங்களுடனல்ல. பின் எவ்விதமெனில் மேன்மேலும் நாட்டில் கதர் துணியை விருத்தியாக்குவதில் நமக்குள்ள மனோதிடத்தாலேயாம். இக்கதரினாலேயே நமக்குள்ளிருக்கும் மதபேதங்களும், ஜாதி வித்தியாசங்களும் விலக்கப்பட்டு ஒற்றுமையுமுண்டாகக் கூடும். முன்பு கதரைத்தவிர வேறொன்றும் கட்டியறியாத நாம் இப்பொழுது மட்டும் ஏன் அதைப் பற்றிக் கஷ்டப்படவேண்டும்? காரியத்தால் நடத்திக்காட்ட வேண்டிய இச்சமயத்தில் நாம் சும்மாயிருப்பது அழகல்ல. கஷ்டதசைக்கும் நாம் சித்தமாயிருக்கவேண்டுமாதலால், இம்முரட்டுத் துணியை நமது புருஷர்கள் உடுக்காவிடினும் நாம் அணிந்து காட்டியே அவர்களைத் திருத்தவேண்டும். அதிர்ஷ்டமானது நிலையுள்ளதல்ல. இப்பொழுது நாம் கஷ்டஸ்திதியில் வருந்தினாலும் ஒரு நாள் பாக்கியசாலிகளாவோமென்பதிற் தடையில்லை. நமது நண்பர்களும், உறவினர்களும் ஸத்தியமென்ற ஆயுதத்தைக் கையிலேந்தியவர்களாய், இப்பிரிடிஷ் கவர்மெண்டை எதிர்த்தனர். இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவில் தங்களுக்குச் சமமாயிருக்கவேண்டுமேயொழிய யஜமானர்களாயிருக்கலாகாதென்றும், கிலாபத்து, பஞ்ஜாப் குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். எனது மகமதிய சகோதரிகளுக்கும் நான் இதைத்தவிர வேறு சொல்வதற்கில்லை. "ஆகாரமில்லாமல் நாம் ஒரு வேளைகூட தரிக்கக்கூடாமலிருப்பது போலவே" சர்க்காவை சுற்றாமலும் இருக்கமுடியாதென்று கருதவேண்டும். நமது மனதில் ஈவு இரக்கமென்னும் குணங்களேதேனுமிருந்தால், ஆயிரக்கணக்கான ஏழைகள் கட்டத் துணியில்லாமலும், குடிக்கக் கஞ்சியில்லாமலும் சாவதைக்கண்டு மௌனமாயிருக்கமாட்டோம். கேவலம் விநோதார்த்தமாகவா அக்திரளற்ற தேசபக்தர்கள் சிறைவாசத்தை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்? ஜவாரிலால் எதற்காக மறுபடியும் சிறைபிடிக்கப்பட்டார்? கதரைப்பரவச்செய்தும் அன்னிய நாட்டுத் துணிகளை வாங்கவொட்டாமலும் செய்ததற்காகவல்லவா? இவ்விதம் ஒரு கவர்மெண்டார் இரக்கமற்றிருக்கும்பொழுது, நாம் கதர் அணிவது எப்படி நியாயமற்றதாகும்?"

இவர் பேசி முடித்ததும் Mrs. மகம்மது அலி பின் வருமாறு கூறினார். "இந்நாட்டுப் பெரிய மனிதர்கள் பிரசங்கிப்பதை நாம் மௌனமாய்க் கேட்டிருந்து பிறகு வீட்டிற்குச் சென்று ஒன்றும் செய்யாமலிருப்பதற்கு இது தருணமல்ல. நமது தலைவர்கள் கூறியபடி நடந்து நமது கடமையைத் தவறாது முடிக்க விரும்புகிறோமென்பதை லோகத்தாருக்கு நாம் காண்பிக்கவேண்டும். நமக்கு ஸ்வராஜ்யம் கிடைக்கவேண்டுமானால், நமக்காகக்காத்து நிற்கும் வேலையை நாம் உடனே மேற்கொள்ளுவதே உத்தமம். ஹிந்துக்கள், மகமதியர்கள், கிறிஸ்துவர்கள், பார்ஸிகள் முதலிய ஒவ்வொரு ஜாதியார்களும் ஒன்று சேருவது முதன்முதலில் இன்றியமையாதது. கடவுளால் ஒன்றாய் சிருஷ்டிக்கப்பட்ட நாம் ஹிருதயத்தில் வேறுபட்டிருக்கலாகாது. நம்முள் ஒருவருக்கொருவர் நேசமும், உதவிபுரிவதும் ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்வதும் இல்லாதிருந்தால் நமது தேசத்திற்கு ஒரு நன்மையுமுண்டாகமாட்டாது. நாம் மட்டும் யாவரும் ஒன்று கூடி நமது கடமையைச் செய்ய முன்வருவோமாயின், ஒருவராலும் எதிர்க்க கூடாதபலத்தைப் பெற்று ஸ்வராஜ்யத்தை இறுதியில் அடைந்து விடுவோமென்பதில் ஆக்ஷேபணையில்லை. இனி அதிகமாய்ப் பேச்சில் காலத்தை வீண்போக்காமல் நமது தேசத்திற்காகவும் மதத்திற்காகவும் நாம் இறக்கவும் துணிந்திருக்கின்றோமென்பதை நடந்து காட்டுவோம். தற்காலம் ஜயிலிலிருக்கும் நமது சகோதரர்களின் நிமித்தம் நாம் ஒரு உதவியும் செய்யவில்லையென்றே எண்ணுகிறேன். செல்வந்தர்களாயுள்ளவர்கள் மட்டும் சாதாரண உடையையும் உணவையும் கைக்கொள்ளத் தீர்மானிப்பார்களாயின், அப்பொழுதாவது, பசியால் வருந்தி நிர்வாணமாய்த் தவிக்கும் பல்லாயிரம் ஏழை ஜனங்களுடைய துன்பத்தின் பொருட்டு சிறிது உபகாரம் செய்தவர்களாவார்கள். இத்தேசமுழுமையும் ஒருபுதிய உணர்ச்சியையுண்டாக்கிய மகாத்மா காந்தி இப்பொழுது 6 வருஷகாலம் சிறையிலிருக்கத் தண்டனை விதிக்கப்பட்டு ஜயிலிலிருப்பது நம்முடைய தாழ்ந்த ஸ்திதியினின்றும் நம்மை முன்னுக்குக் கொண்டுவந்து சந்தோஷமடைவிப்பதற்கேயன்றி வேறெதற்காக? அவரைச் சிறையினின்று விடுவிப்பது நம்முடைய வேலையல்லவா? மகாத்மா காந்தி சாதாரண மனிதரல்ல. ஒருநிகரற்ற உத்தமரென்பதை நாமெல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் அவரை மதிப்புடன் கொண்டாடி நேசித்து யாவரும் ஒற்றுமையுடன் கதர் தரிக்க வேண்டுமென்று அவர் விரும்பியபடி செய்வதே நமது கடமை. ஒரு அன்னிய நாட்டின் கீழகப்பட்டு நாம் வருந்துவது நம்முடைய தவறினாலேயேயொழிய வேறல்ல. இவ்வாறு சொல்லி இவர் உட்கார்ந்ததும் கடைசியாக பீ அம்மன் எழுந்து பேசியதாவது "எல்லாருடைய நன்மைக்காகவும் நாம் ஒன்று சேருவது முற்றிலும் அவசியமாகும். இந்தியா, ஹிந்து மகமதியர்கள், இருவருக்கும் சொந்தமான தேசம். அன்னிய நாட்டுத் துணிகளையணிவதனால் நாம் நம் தேசத்தை பிறருக்கு விற்றுவிட்டதுடன், நாமும் அவர்களுக்கு அடிமைகளாய் விட்டோம். ஆயினும், இப்பொழுது நம்முடைய கடமை அன்னிய மனிதர்களின் ஆளுகையிலிருந்து நம்நாட்டையும், ஜயிலிலிருக்கும் எண்ணிறந்த தேசாபிமானிகளையும் விடுவிக்கவேண்டியதே. உண்மையாய், இனியும் நாம் இவ்வடிமைத்தனத்தைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. நமது தேசத்தை ரக்ஷிப்பதற்காக நாம் கதர் கட்டிக் கொள்ளுவது ஒரு பெரியகாரியமா? நாம் வெட்டியாயிருப்பதனாலேயே கோடி கணக்கான ரூபாய்கள் நமக்கு நஷ்டமாகின்றன. இத்தேசத்திலிருக்கும் 33 கோடி ஜனங்களில் இரண்டுகோடி இந்தியர்கள் தம் கைகளினால் நூல் நூற்று நெய்ய வாரம்பித்தாலும் தேசத்திற்கு எவ்வளவோ க்ஷேமமுண்டாகும். நாமெல்லாரும் ஜாதி மத பேதமொன்றையும் பாராது ஒன்று சேர்ந்து நம் தேசத்தை இவ்விழிநிலைமையினின்றும் விடுவிப்பதே நமது முதற்கடமையாகக் கொண்டு ஒழுகுவோம்," இவ்வாறு பேசிவரும் ஸ்திரீ ரத்தினங்களை அவர்கள் கூறியதுபோல், நாம் மௌனமாய்க் கேட்டிருந்து காரியத்திலொன்றும் காட்டாமலிருப்பது ஒவ்வொருநாளும் நமது நாடு இன்னும் தாழ்ந்தநிலைமையையடைவதை நன்குவிளக்குகின்றது. இனிமேலாவது நம் நாட்டிற்காக உழைக்கும் மனதையும் தேசபக்தியையும் கடவுள் நமக்கு அளிப்பாராக!.

I. C. S. பரீக்ஷை

அலகாபாதில், 1923 ஜனவரி 8 தேதிமுதல் ஸெனெட்ஹவுஸில், I. C. S. போட்டி பரீக்ஷை நடக்கும். இதற்கு உரிய சட்டதிட்டங்களை "இந்தியா கெஸட்" (1—7—1922) முதல் பாகத்தில், 738 வது பக்கத்தில், காணலாம். இப்பரீக்ஷைக்குப் போக எண்ணியிருக்கின்றவர்கள்: 1922, ஆகஸ்டு 15 தேதிக்குமுன், அந்தந்த மாகாணத்திற்கென்று இருக்கும் "சீப் செக்ரிடரி"க்குக் கண்டிப்பாய் எழுதவேண்டும்.

பப்லிஸிடி பீரோ, மதராஸ்.

ஒன்பது கனவான்கள் இவ்வருஷம் இந்தியாவில் நடந்த I. C. S. பரீக்ஷையில் தேறியிருக்கிறார்கள்.

M. S. A. வேங்கட சுப்பிரமணியன் (மதராஸ்)	1032 (மார்க்)
R. A. சிவராம கிருஷ்ணய்யர் (மதராஸ்)	1025 (மார்க்)
A. N. ஸப்ரூ (ஐக்கியமாகாணங்கள்)	966 (மார்க்)
P. N. A. ராமஸ்வாமி அய்யர் (மதராஸ்)	932 (மார்க்)
A. D. கார்வாலா (பம்பாய்)	927 (மார்க்)
பரமாநந்த (மத்தியமாகாணங்கள்)	903 (மார்க்)
B. K. குஹா (பங்காளம்)	883 (மார்க்)
A. முகோபாத்யாய (பிஹார்)	875 (மார்க்)
S. N. குஹாராய் (பங்காளம்)	873 (மார்க்)

இவர்களுக்குள் மூவர் சென்னை ராஜதானியில் படித்தவர்கள். கல்வித் திறமையில் நமது மாகாணத்தில் பிறந்தவர்கள், மற்றவர்களைக் காட்டிலும் குறைந்தவர்களல்ல. கவர்மெண்ட் உத்தியோகத்தில் மிகவும் உயர்ந்த ஸ்திதியில் இவர்கள் இருப்பார்கள். எப்பெரும் பதவியடைந்த போதிலும், வறுமையில் தவிக்கும் தமது தேசத்தையும் தமது சகோதரர்களான இந்தியர்களையும் இவர்கள் மறக்கமாட்டார்களென நம்புகிறோம்.

ஒரு பையனின் பெருமை.

வயதில் மிக்க சிறியவனே; இன்னும் பதினொன்கு நிரம்பவில்லை; ஆகிலும், இளங்கன்றுபோல் குதித்தோடி விளையாடுவதற்குத் தன்னைக் கூவியழைக்கும் தோழர்களை இவன் லக்ஷ்யம் செய்யவில்லை. யாரோ ஒருவர் இவனைக் கூப்பிடுவது போலும், மேலும் அவரது வார்த்தையை மிகுந்த பக்தியுடன் பருகுவதுபோலும், இவன் தோன்றினான். 'இந்தியா வென்னும் திவ்வியாலயத்தில், இறந்தவர்களையும் உயிர்ப்பித்தெழுப்பக்கூடியதோர் சங்கத்துவனி கிளம்பி, தனது நாதத்தால் நக்ஷத்திரமண்டலம் வரையில் அளாவி நின்றது. இதுவே இவனின் காதில் விழுந்து, இவன் ஹிருதயத்தையும் ஊடுருவிச் சென்றதும்போலும்! பல நூற்றாண்டுகளாய்க் கொடும் நித்திரையில் அமர்ந்திருந்தவர்களும், எந்த சாபத்தாலோ மதிமயங்கிக் கிடந்தவர்களும் "விழித்துக்கொள்ளுங்கள், எழுந்திருங்கள், எழுந்திருங்கள்," எனப் பிரியத்துடன் மன்றாடியதோரு மகாத்மாவின் வாக்குவன்மையினால், லக்ஷக்கணக்காக மெதுவாய் எழுந்ததைபார்த்துப் பிரமிக்காதவர்களும் உண்டோ! அப்பரமபுருஷனின் இனிமையான சொற்கள் இக்குமாரனையும் இழுத்து, முழுவதும் தம்வசப்படுத்தின. இவனல்லவோ பாக்கியசாலி! கொஞ்சமும் கலங்காமல், தாய்மையே அவதரித்து வந்ததுபோல, பாரதமாதாவின் கைங்கரியத்திற்காகப் பரமாநந்தத்தால் துள்ளிக் குதித்துத், துணிவுடனும், பணிவுடனும், பேரன்புடனும், தயங்காமல் முன் நின்றான். அங்கே அக் கோவிலுக்குள் அங்கம் தளர்ந்தவர்களும், தாடி நரைத்தவர்களும் பாரதமாதாவைப் பூஜிப்பதிலுள்ளதோர் எல்லையற்ற உத்ஸாகத்தால், திரும்பவும் யௌவனமடைந்து, ஒப்பற்ற தமது வலிமைப் பெருக்கால் உலகத்தையே ஊட்டி உயர்த்தக் காத்திருக்கும் குறிகளுடன் காணப்பட்டனர். வயதில் எவ்வளவோ சிறியவனாகிலும், வாத்ஸல்யத்துடன் இவனைப்பெருமையாகவே தங்களின் நடுவில் வரவேற்றுக்கொண்டார்கள். இளமை மாறாப்பருவத்தில். மிகவும் மிருதுவானதும், களங்கமற்றதும், இந்தியாவின் மீது இருக்கும் தன் பக்தி வெள்ளத்தால் கரைபுரண்டோடும் மனதுடன், இப்பாரத நாட்டிற்குத் தன்னையே இவன் அர்ப்பணம் செய்யத்துணிந்தானல்லவா? உத்தம சேவகர்களின் விசேஷ லக்ஷணங்கள் பொருந்தியவனானதால், எப்போதும் இந்தியாவின் க்ஷேமத்திற்கு உழைப்பதிலேயே கண்ணுயிருந்ததுடன், அதில் விளையும் துன்பங்களை, சுகமென்று எண்ணியே, முழுவதும் அனுபவிக்கத் தயாராகவுமிருந்தான்.

தன் பிராணனைப் பார்க்கிலும் பதின்மடங்குயர்ந்தவர்களாய் ஒருவன் மதித்து வரும் தனது அன்பர்களுக்காக, எதைத்தான் சகிக்கமாட்டான்? பாரத நாடாகிய இப் பழம் பெருநாட்டைத்தனதுள்ளத்தில் வைத்துப் போற்றிவரும் இச்சிறுவன் அதற்கும் மோக்ஷமுண்டென்பதைத் தனது திவ்வியதிருஷ்டியால் கண்டான்.

இவனிருந்த காசிமாநகரின்கண், ஒழுங்கும் அமைதியும் நிறைந்தே யிருந்தன. ஆயினும் இப்பட்டணத்தில் சென்ற டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி இம் மூன்று மாதங்களுக்குள், காணத்தகாத பல கொடுங்காக்ஷிகளைக் கண்ணுற்றும் ஒருவாறு ஜனங்கள் பொறுத்திருந்தார்கள். மேலும் நிகரற்ற தனது வைபவத்தால், காசிதேவியும் இச்சிறுவனிடம் மிகுந்த பக்ஷம் பாராட்டி, பிரிடிஷ் ஸிம்ஹத்தைப் பார்த்தும் கொஞ்சமும் அஞ்சாத நெஞ்சத்தை இவனுக்களித்தனள். ஒவ்வொரு தெருவிலும், மேலும் புண்ணியத்திற்கென நிரம்பவும் கியாதிபெற்ற எல்லா கட்டடங்களிலும், "வந்தே மாதர" மென்றும், "மகாத்மா காந்திக்கி ஜேய்" என்றும், பிரமாதமாய், ஜனங்கள் ஆரவாரத்துடன் கோஷம் செய்தார்கள். எங்கும் தளராமலே, போர்முனையில் போல, எவ்வித விபத்துகளும், நேரிடாவண்ணம், காங்கிரஸ் கமிட்டியின் ஆணைகளைத் தலையால் வகித்து, அஹிம்ஸை யென்னும் விரதத்தை எல்லோரும் அனுஷ்டிப்பதுதான் தர்மமென்று இவன் பிரசங்கம் செய்வது வழக்கம். வயதில் சிறியவர்கள் காங்கிரஸ் வேலைகளில் தலையிடக் கூடாதென்றதோர் மரியாதைக்கு உட்படவேண்டியிருந்தும், அதனால் எள்ளளவும் கட்டுப்படுத்தப்படாமல், காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தே இவன், தனது தேசத்தின் நிமித்தம், மெத்தகளிப்புடன் உழைத்து வந்தான்.

கடைசியில், இவன் வெகுகாலமாக விரும்பியவாறே, அதிகாரிகள் இவனைப் பிடித்து விட்டார்கள். ஆகிலும், ஒருவிதமும் துன்பமடையாமல் இவன் சீக்கிரம் விடுதலையடைந்தான். விடுபட்டுவந்ததும், சிறிதேனும் பயப்படாமல், மறுபடியும் காங்கிரஸ் ஏவல்களில் இவன் மும்முரமாக வேலை செய்வதைக் கண்டு யாரும் வியந்தார்கள். சொல்பகாலத்திற்குள், அகாரணமாக இவன்மீது பொய்க்குற்றம் சாட்டி, போலீஸார் இவனை மீளவும் ஜெயிலிலடைத்தார். சிலநாள் கழித்து இவனை விசாரிப்பதற்காக நியாயஸ்தலத்திற்குக் கொண்டு போனார்கள். "உன் தகப்பன் பெயரென்ன?" "ஸ்வதந்திரம்"—"உன் வீடு எங்கே?" "சமீபகாலமாய் ஜெயில்தான்."—இவ்வாறு இத்திறன்

பதிலுரைத்தான். பன்னிரண்டு சவுக்கடி இவனுக்கு விதிக்கப்பட்டது. டிஸ்டிரிக்ட் ஜெயிலிலிருந்து ஸெண்ட்ரல் ஜெயிலுக்கு இவனைக் கொண்டு போனார்கள். அங்கே நான்கு உபாயங்களாலும் போலீஸார் இவனை வெருட்டிப்பார்த்தும் ஒன்றும் பலிக்கவில்லை. அவர்களின் பயத்தையும், புத்திமதியையும் கடுமைவார்த்தைகளையும், சட்டைபண்ணாமல், தன்னைச் சித்திரவதை செய்திடினும், மானமே பெரிதென்ற நிச்சயத்துடன் சற்றும் பின்வாங்காது இருந்தான்.

பிறகு சவுக்காலடிப்பதற்காகட் "டிக்டிகிக்கு" (அதற்கென்றிருக்குமோர் மேடைக்கு) இழுத்துச்சென்று, அதன் மீது இச்சிறுவனை ஏற்றினார்கள். தானாகவே ஏறக்கூடுமெனப் பன்முறை அவன் கூறியும், அதை அலக்ஷியம் செய்தே, பலவந்தமாய் இவனின் கைகளையும் கால்களையும் இறுக்கிக்கட்டினர். "ஏன் என்னை இப்படிக்கட்டவேண்டும்? நான் அசங்காமல் நிற்கின்றேன். உங்கள் வேலையை நடத்தலாம்,"—இவ்வாறு இவன் சொல்வதைக் கேட்டதும், எவ்வளவுதான் கடோர சித்தமுடையவர்களாகிலும், அங்கிருந்த கைதிகளின் முகத்தில் கண்ணீர் தாரையாய்ப் பெருகிற்று. ஆனால் இவனோ மிகுந்த காம்பீரியத்துடன் அசைவற்று இருந்தான். இவனைப் பலயுகங்களாய்ப் பரிதவித்து நிற்கும் பாரதமாதாவே அப்போது தைரியத்தைத் தந்து காப்பாற்றினாள் போலும். ஒவ்வொரு அடியும் தசைக்குள் கிழித்துச்செல்லுகையில், "ஸ்வதந்திர பாரதக்கி ஜேய்" என அழுத்தமான குரலில், கணீரென, கோஷித்தான். மேன்மேலும் கசையடிகள் ஓங்கியேவிழ, பலம் குன்றுவதால் இவன் துவனியும் குறைந்து வந்ததே தவிர, சௌர்யமும், தீர்மானமும் அணுகளவும் மழுங்கவில்லை. இவ்வற்புதத்தைக்கண்டு, யுகக்கணக்காய்ப் பிரசித்திபடைந்திருக்கும் காசி தேவியும் தனக்குள் மகிழ்ந்திருப்பாளென்றே தோன்றுகின்றது. எவ்வளவாயிரம் ஸாதுக்களைத் தனது மடியில் வைத்து இவள் வளர்த்துவந்திருக்கின்றாள்! அவர்களின் திவ்வியஞ்ஞானம் முழுமையும் பொருந்தியவளுக்கோ, நேற்றைய தினம் முளைத்த மேல்நாட்டாரின் ஜம்பமும் படாடோபமும் நமது நாகரீகத்தின்முன் ஓர் நிமிஷமும் பயன்படாதெனப் புலப்படாமலிருக்கக்கூடும்? கேவலம் குரூரத்தாலும், பயத்தாலும் எவனையும் ஆளுவோமென்று கர்வமுற்றிருக்கும் இம் மேல்நாட்டாரைத் திருணமாகவே பாவித்து இவன் பரிகசித்து நின்றான் போலும்! சீ, இவர்களுக்கென்ன தெரியும்? மௌட்டியமும், அகங்காரமும், அகம்பாவமும்தான் இவர்களிடம் குடிகொண்டிருக்கின்றன. எதற்கும் பலாத்காரமும், கொடுங்கோன்மையுமே இதுகாறும் இவர்கள் அறிந்திருக்கும் உயர்ந்த உபாயங்கள்! நிர்ப்பயமற்ற ஒருவன் முன்பு இவை எம்மாத்திரம்! அவனது சக்தியை ஒடிக்க யாரால் முடியும்? தன் சுதந்திரங்களை அடையத் தீர்மானித்திருக்கும் இவ்விந்தியாவை நடத்துவது இப்படியா? மேல் நாட்டு மூடர்காள், உங்கள் பலமெல்லாம் முற்றிலும் வீணென்பதை எப்பொழுது கற்றுக்கொள்ளப்போகிறீர்கள்?

இக்கசையடி வியாபாரம் முடிந்தவுடன் பலஹீனத்தால் இச்சிறுவன் நிற்கக்கூடவில்லையாயினும், இவன் கண்களில் பௌருஷமும், தன் தேசத்தினிடமிருந்த பக்தியும் விசுவாசமும் ஒளிவீசின. ஜெயில் உத்தியோகஸ்தர்கள் இவனை வண்டியில் (எக்காவில்) வீட்டுக்கனுப்புவதாய் உபசாரம் செய்ததைத் தள்ளிவிட்டு, கால்நடையாகவே தன இருப்பிடத்திற்குச் சென்றான். காங்கிரஸின் ஆஞ்ஞைகளை சிரமேற்கொண்டு பாடுபட்டுழைத்ததற்காக டிஸ்டிரிக்ட் ஜெயிலில் அடைபட்டவர்கள் எல்லோரும், இச்செய்திகேட்டு, அன்றையதினம் முழுமையும் பட்டினி கிடந்தனர். மிகுந்த துக்கத்தால், கண்ணீர் ததும்பி, தொண்டையை யடைத்துப் பேசவொட்டாமல் தடுத்தது. ஆயின் இவ்வாறு தீரத்துடன் நடந்த இச்சிறுவனைப் பெருமையாய்த் தம் நாட்டிற்கே இவன் ஓர் அணிகலமெனப் புகழ்ந்தார்கள்.

மறுநாள், இப்பையன் ஜெயிலினுள்ள தனது தோழர்களைப் பார்க்க விரைந்தோடினான். அவர்களைக் காணாமல் எப்படிப் பொறுத்திருக்க முடியும்? பாரதமாதாவுக்காகத்தான் அனுபவித்ததை பாக்கியமென்றே எண்ணி, தனது நண்பர்களையும் அவ்வாறே தைரியத்துடன் நடக்கப் பிரார்த்தித்தான். சவுக்கடி பட்டாலொழிய, ஒருவன் "பக்கா" தேசாபிமானியாக முடியாதென்று இவன் சொன்னதைக்கேட்டு, எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். இவனைப்போலவே, அச்சமயம் நேருங்கால், தாங்களும் அழுத்தத்துடன் எதையும் சகிப்பதற்கு எல்லாம்வல்ல ஈசனின் அருளை வேண்டினர்.

Adapted from the "Hindu"

"ரெக்" (The Wreck)

புயற் காற்று

(விரஜமோஹன பாபுவின் குமாரன் இராமேசன் கல்கத்தாவில் சட்டப்பரீக்ஷைக்கு வாசிக்கும்போது அண்டை வீட்டிலிருந்த அன்னதா பாபுவின் குமாரத்தி ஹேமநளினியைக் காதலித்ததும் அவன் தகப்பனார் திடீரென வந்து அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று தன் பழைய நண்பன் ஈசானுடைய பெண்ணிற்கு அவனை கல்யாணம் செய்வித்ததும், அவர்கள் எல்லாருமாய் கல்யாணம் கழிந்து திரும்பி வரும்போது புயற் காற்றால் நதியில் அவர்கள் வந்த ஓடங்கள் கவிழ்ந்ததும் சென்ற வாரத்து 'தமிழ் உலகில்' சொல்லப்பட்ட கதை)

ஆகாய மண்டலம் மறுபடி நிர்மலமாயிற்று. வெண்ணிலா வீசவே ஆற்று மணற் பரப்பெல்லாம் விதவைகள் உடுக்கும் வெள்ளாடை போர்த்தாற்போல் இருந்தது. நதியிலோ ஒரு படகேனும் காணப்படவில்லை. அலைகூட அடிக்கவில்லை. நோயுற்றுழல்பவனுக்கு மரணம் வரும்போது வரும் அமைதிபோல ஆறு கரை எல்லாம் அமைதியுற்றிருந்தன.

இராமேசனுக்கு பிரக்ஞை வந்தபோது ஆற்று நடுவில் மணற்பாங்கான திட்டு ஒன்றின் கரையோரமாக தான் மோதப்பட்டுக்கிடப்பதைக்கண்டான். தனக்கு என்ன நேர்ந்தது என்பது அவன் ஞாபகத்திற்கு வரச் சற்று நேரமாயிற்று. பிறகு ஜுரத்தில் காணும் கனவுபோன்று தனக்கு நேர்ந்த ஆபத்து முழுவதும் ஞாபகத்திற்கு வரவே திடுக்கிட்டு எழுந்திருந்தான். தன் தகப்பனாரும் கூட வந்த நண்பரும் எக்கதியாயினரோ? சுற்று முற்றும் பார்த்தான். மனுஷ்ய சந்தடியொன்றும் இல்லை. ஜலக்கரையோரமாக வெகு தூரம் தேடிப்பார்த்தும் பயனில்லை. ஒருவரையும் காணவில்லை. கங்கையில் விழும் சிற்றாறான அந்த "பத்மா" நதியின் மடியிற் கிடக்கும் குழந்தை போன்ற அந்த மணற் தீவு நிச்சப்தமாயிருந்தது. அந்தத் தீவைக் கரையோரமாக ஒரு புறம் முழுவதும் சுற்றிப் பார்த்தபின் மற்றொரு புறத்திலும் தேட ஆரம்பித்தான். ஆ! அதோ அங்கே சிவப்புத்துணிபோல் கிடப்பது என்ன? அருகே ஓடினான். மங்கள மணவாடை தரித்த ஒரு சிறு பெண் உணர்வற்று அசைவற்று சவம்போல் கிடந்தாள்.

இராமேசன் நீரில் மூழ்கி மூச்சடைத்துப்போனவர்களுக்கு மூச்சைத்திரும்ப வரவழைப்பதற்கு செய்யவேண்டிய சிகித்சையை கற்றிருந்தது இப்போது பயன்பட்டது. அந்தப்பெண்ணின் கைகளை அவள் தலைக்குமேல் தூக்கி பிறகு அவளுடைய இருபக்கத்திலும் சேர்த்துநெருக்கி பல விதமாக சிரமப்பட்டபின் கடைசியில் அவளுக்கு மூச்சு வந்தது; அவளை கண்ணைத்திறந்து பார்த்தாள்.

இப்படியெல்லாம் பட்ட சிரமத்தால் இராமேசனுக்கு மூச்சுவாங்கவே, அவளை 'நீ யார்' என்று கேட்கக்கூட அவனால் முடியவில்லை. அவளுக்கும் பிரக்ஞை நன்றாய் தெளியவில்லை. கண்ணைத்திறந்ததும் களைப்பினால் மறுபடியும் கண்ணை மூடிவிட்டாள். ஆனால் அவள் மூச்சுமட்டும் சரியாக இருந்ததால் இராமேசன் வருத்தப்படவில்லை. வெகுநேரம் அவளை அந்த நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். வாழ்விற்கும் அழிவிற்கும் இடையேபோல் இப்படி நீருக்கும் நிலனுக்கும் மத்தியில் நிர்மானுஷ்யமான ஒரு இடத்தில் ஸ்திரீ புருஷர்கள் நேராக முதல் முதல் சந்திக்க நேரிடுவது வியப்பிற் கிடமன்றோ?

யார் சொன்னது சுசீலை பார்வைக்குஅவ்வளவு அழகாக இருக்கமாட்டாள் என்று? முழுநிலா தனது இன்னொளியை சூழஎங்கும் பொழிந்தபோதிலும், வளைந்து விளங்கிய ஆகாய மண்டலம் நிர்மலமாய் அளப்பதற்கரிய ஆழமுடையதாய் தோன்றிய போதிலும், இவையெல்லாம் தூங்கிக்கிடக்கும் சிறுபெண்ணின் முகத்தழகை எடுத்துக்காட்ட இருக்கும் சுற்றழகாகவே தோன்றிற்று இராமேசனுக்கு.

மற்ற சமாசாரமெல்லாம் மறந்து இருந்தான் இராமேசன். "நல்ல வேளை, நான் இவளை கல்லியாண சந்தடியில் கண்ணெடுத்துப் பார்க்காமலிருந்தது. இப்போது எப்படி கண்ணாரப் பார்க்கின்றேனோ அப்படி அவளை அப்போது பார்க்க முடியாதல்லவா? கல்லியாண காலத்தில் உபாத்தியாயர் பின்னோடு மந்திரங்களைச்சொல்லி மனைவியாக்குவதை விட, போன மூச்சை திரும்பவரவழைத்து இவள்எனக்கே உரியவள் என்று மீட்டுக் கொள்வது எவ்வளவு மேலான விவாகம். அப்படி மந்திரங்களை மட்டும் முணுமுணுப்பதால் மனிதர் முன் மட்டுமே இவள் எனக்கு மனைவியாவாள். இப்பொழுதோ கருணைக்கடவுள் மகிழ்ந்தளித்த அரும்பொருளாகவன்றோ விளங்குகின்றாள்?

இதற்குள், அந்தப்பெண், பிரக்ஞை தெளிந்து எழுந்திருந்து உட்கார்ந்து குலைந்து கிடந்த உடையை நேராக உடுத்திக்கொண்டு துணியை இழுத்து முகத்தை மறைத்துக்கொண்டாள்.

"படகிலிருந்த மற்றவர் என்ன ஆனார்கள் தெரியுமா?" என்று கேட்டான் இராமேசன். அதற்கு பதில் பேசாமல், தலையை மட்டும் அசைத்தாள்.

"இங்கே கொஞ்சநேரம் தனித்து இருப்பாயானால் நான் போய் தேடிப்பார்த்து வருகிறேன்." அதற்கும் பதிலில்லை. ஆனால் அதைக்கேட்டு நடுங்கி ஒடுங்கிய அவளுடைய உடல் "என்னை இங்கே தனியே விட்டுப்போகக்கூடாது" என்று வாய்பேச்சினும் வியக்தமாக அவனுக்குத் தெரிவித்தது.

இதைத் தெரிந்துகொண்டான் இராமேசனும். எழுந்திருந்து நாற்புறத்தையும் பார்த்தான்; வெள்ளென விளங்கும் அந்த மணற்திட்டில் ஒன்றுமே இல்லை; தன் நண்பரை ஒவ்வொருவராய் பேர் சொல்லி உரக்கக் கூவி அழைத்தான். பதிலொன்றுமில்லை.

மறுபடியும் மணலில் உட்கார்ந்தான்; கையால் முகத்தைத்தாங்கிக் கொண்டிருந்தாள் அவனருகிலிருந்த பெண்மணி; அவள் அழுகையை அடக்கிக் கொள்ள யத்தனிப்பது அவள் விடும் பெருமூச்சால் தெரிந்தது. அவளைத் தேற்றுவதற்கு வாய் வார்த்தையாடுவதில் பிரயோசன மொன்றுமில்லை, என்று அவனுக்குத் தோன்றிற்று. மெதுவாய் அவள் கிட்டநெருங்கி குனிந்து வளைந்திருந்த அவளுடைய கண்டத்தையும் அவளுடைய மெல்லிய கூந்தலையும் மிருதுவாய் தடவிக் கொடுக்கவே, அவள்துக்கத்தை அடக்கமுடியாதவளாய் விம்மிவிம்மி அழ ஆரம்பித்தாள்; இராமேசனுக்கும் கண்ணீர் பெருகிற்று.

இப்படி இவர்கள் இருவரும் அழுது முடியும் போது சந்திராஸ்தமனம் ஆயிற்று. எங்கும் இருள் பரவவே அந்த மணற்காடு முழுவதும் ஒளிமங்கி பிசாசுபோல் பார்ப்பதற்கு பயங்கரமாயிருந்தது. நக்ஷத்திர ஒளியிலே எல்லாம் கனவில் காணும் தோற்றங்கள்போல கோரமாய் காணப்பட்டன. அந்த மங்கலான ஒளியில் வளைந்தோடும் நதியானது பெரிய கரிய மலைப்பாம்பு போல் இருட்டில் பளபளத்தது.

இராமேசன் அந்தப்பெண்ணினுடைய கைகளை தன் கைகளால் மெதுவாய் பற்றிக்கொண்டான். அவை பயத்தால் ஜில்லிட்டிருந்தன. உடனே, அவளை தன்புறம் இழுத்து மார்போடு சாற்றிக் கொண்டான்; அப்போது அவளுடைய இயற்கை சுபாவமான லஜ்ஜை முதலிய குணங்கள் போய் பயமே மேலிட்டு நிற்கவே, அவள் வெட்கிப் பின்னடையவில்லை. வேறு மனுஷிய சஞ்சாரம் இல்லாத அந்த இடத்தில் அடர்ந்த இருளில் தனக்குத் தஞ்சமாவது இராமேசனுடைய மார்பே, இது வெட்கத்திற்கு சமயமல்ல, என்று அவனுடைய மார்பில்ச்சாய்ந்தாள். அவனும் கைகளால் அவளை அணைத்துக்கட்டிக்கொண்டான்.

சுக்கிராஸ்தமனமாயிற்று. கீழ்வானம் சற்று நேரத்திற்கெல்லாம் வெளுத்தது; பிறகு சிவப்புற்றது. இராமேசன் ஆழ்ந்த நித்திரையில் மணல்மேல் படுத்துக்கொண்டிருந்தான். அவனருகில் அவன் கைமேல் தலை வைத்துக்கொண்டு அந்தச் சிறு பெண்ணும் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். பால சூரியனின் கிரணங்கள் மெல்லென அவர் மீது பட்டதும் திடீரென இருவரும் விழிப்புற்றனர்; ஒன்றும் தெரியாமல் ஒரு நிமிஷம் திகைத்து நின்றனர். பிறகு, படகு உடைந்து நாம் கரையோரத்தில் 'தள்ளப்பட்டோம், ஊர் இன்னும் வெகு தூரம் இருக்கின்றது என்ற ஞாபகம் வந்தது.

வேண்டும்
அளவு 27 × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
டாப்பில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 3-8-0
வாரத்திற்கு ரூ. 15-0-0
MADRAS ADVERTISINGS,
10, Venkaier Street, Madras.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை மார் முதுகு இடுப்பு	வலி	தேள் பாம்புக் பூச்சிக் விஷக்	கடி	பல் கால் காது கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்திர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிட்டெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

சுதேசியமானது! உபயோகமானது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.